# வந்திருப்பதின் நிழல்
# SHADOW OF WHAT HAS COME

## அறிமுகம்

"கிறிஸ்துவுக்குள்" நாம் வாழ்கின்ற புதிய சூழலையும் தேவனுடன் நமக்கு கிடைத்துள்ள உறவையும் வெளிப்படுத்துகின்ற புதிய ஏற்பாட்டு வசனங்களை வாசிக்கவும், புரிந்துகொள்ளவும், அவைகள் மீது விசுவாசத்தை வைக்கவும் நம்மை ஊக்குவிப்பதே இந்தப் பாடத்தின் நோக்கம். இந்தப் பாடத்தின் தலைப்பு *எபிரெயர் 8:5*இல் காணப்படுகிறது. கிறிஸ்துவின் சரீரத்தின் அங்கத்தினர்களாக கிறிஸ்தவர்கள் இப்பொழுது அனுபவித்து மகிழும் ஆசீர்வாதங்களின் நிழலாக செயல்பட்ட லேவி ஆசாரியத்துவம், ஆசரிப்புக் கூடாரம், பின்னர் உருவான தேவாலயம் ஆகியவற்றின் செயல்பாட்டைக் குறித்து எட்டாம் பாடத்தில் பார்த்தோம்.

*மேற்சொல்லியவைகளின் முக்கியமான பொருளென்னவெனில்; பரலோகத்திலுள்ள மகத்துவ ஆசனத்தின் வலதுபாரிசத்திலே உட்கார்ந்திருக்கிறவருமாய், பரிசுத்த ஸ்தலத்திலும், மனுஷரால் அல்ல, கர்த்தரால் ஸ்தாபிக்கப்பட்ட மெய்யான கூடாரத்திலும் ஆசாரிய ஊழியஞ்செய்கிறவருமாயிருக்கிற பிரதான ஆசாரியர் நமக்கு உண்டு. எபிரெயர் 8:1,2.*

## பாடம்

இயேசு கிறிஸ்து தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்து பிரசங்கித்தார். அப்போஸ்தலர்களுக்கு பயிற்சி கொடுத்தார். தமது ஆசாரியத்துவத்தில் கிறிஸ்தவர்களுக்காக சிலுவையின் மீது இரத்தம் சிந்தி "கிருபாதார பலி" ஆனார். *1 யோவான் 2:1-2.* "கிறிஸ்து பாடுபடவேண்டுமென்று தேவன் தம்முடைய தீர்க்கதரிசிகளெல்லாருடைய வாக்கினாலும்





முன்னறிவித்தவைகளை இவ்விதமாய் நிறைவேற்றினார். *அப். 3:18.* "தேவன் அவருடைய மரண உபாதிகளின் கட்டை அவிழ்த்து, அவரை எழுப்பினார்; அவர் மரணத்தினால் கட்டப்பட்டிருக்கக்கூடாதிருந்தது." *அப். 2:24* "இந்த இயேசுவை தேவன் எழுப்பினார்; இதற்கு நாங்களெல்லாரும் சாட்சிகளாயிருக்கிறோம். அவர் தேவனுடைய வலதுகரத்தினாலே உயர்த்தப்பட்டு, பிதா அருளிய வாக்குத்தத்தத்தின்படி பரிசுத்த ஆவியைப் பெற்று, நீங்கள் இப்பொழுது காண்கிறதும் கேட்கிறதுமாகிய இதைப் பொழிந்தருளினார்." *அப். 2:32,33.* இயேசு கிறிஸ்து இப்பொழுது தமது மக்களாகிய கிறிஸ்தவர்களுடைய ராஜாவாகவும், பிரதான ஆசாரியராகவும் தேவனுக்கு ஊழியஞ்செய்கிறார். *அப்போஸ்தலர் 2:33-36; 5:31; எபிரெயர் 1:8,13;4:14-16.*

"ஒருவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன்" என்று இயேசு அறிவித்தார். *யோவான் 3:5.* பார்க்கவும் *யோவான் 19:34; 1 யோவான் 5:6-9.* தேவன் தம்முடைய ராஜ்யத்தில் தம்முடைய பிள்ளைகளாய் இருக்கும்படி கிறிஸ்தவர்களை ஏன் உருவாக்கினார் என்பதை நாம் முதலில் கவனித்தோம். *ரோமர் 8:28-30.* "உலகத்தோற்றத்திற்கு முன்னே தேவன் நம்முடைய மகிமைக்காக ஏற்படுத்தினதும், மறைக்கப்பட்டதுமாயிருந்த இரகசியமான" தேவ ஞானமாக இது இருக்கின்றது. *1 கொரி. 2:7.* மனந்திரும்புதலுக்கு ஏதுவாய் நம்மை வழிநடத்தின நமது விசுவாசம் இதுதான். *அப்போஸ்தலர் 3:20.* நம்முடைய இருதயங்களையும் மனங்களையும் தேவனிடம் திருப்புகின்ற செயல்முறையாக இது இருக்கின்றது. அதாவது நமது மனந்திரும்புதலினால் இயேசுவின் இரத்தத்தினாலான அவருடைய புதிய உடன்படிக்கையை

ஏற்றுக்கொண்டோம். *மத்தேயு 26:28; 2 கொரி. 7:10; எபி. 8:10-12.* இப்பொழுது நம் இருதயங்களில் உள்ள இந்த விசுவாசத்தின் வார்த்தைகளால் நாம் கர்த்தராகிய இயேசுவை அறிக்கையிடுகிறோம். *ரோமர் 10:9.* இந்த அறிக்கை ஞானஸ்நானத்திற்கு முன்பாக செய்யப்படும் ஒரு சடங்காச்சாரம் அல்ல. தர்சு பட்டணத்தானாகிய சவுலிடம் அனனியா, கீழ்ப்படியச் சொன்ன உபதேச சட்டத்திற்கு நாம் கீழ்ப்படிவதற்கு முன்பு நம்முடைய இருதயங்களிலும், மனங்களிலும் நிகழ்ந்த செயல்களாக மனுக்குலத்துக்கான தேவனுடைய சித்தத்தின் மீது விசுவாசம், மனந்திரும்புதல், நம்முடைய விசுவாசத்தை அறிக்கையிடுதல் ஆகிய செயல்கள் உள்ளன. “இப்பொழுது நீ தாமதிக்கிறதென்ன? நீ எழுந்து கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொண்டு, ஞானஸ்நானம் பெற்று, உன் பாவங்கள் போகக் கழுவப்படு என்றான்.” *அப்போஸ்தலர் 22:16.*

அப்போஸ்தலனாகிய பவுல் என்று நாம் அறிந்திருக்கிற சவுல், ஞானஸ்நானம் பெறும்படிக்கு நாம் தண்ணீருக்கு கீழ் இருந்தபோது நம்முடைய “உள்ளான மனிதனுக்கு” என்ன நடந்தது என்பதை ரோமாபுரியில் இருந்த கிறிஸ்தவர்களுக்கு விளக்கிச் சொன்னான். *ரோமர் 6:4-11.* பரிசுத்த ஆவியானவரால் வழிநடத்தப்பட்டவர்களால் போதிக்கப்பட்ட உபதேச சட்டத்திற்கு நாம் கீழ்ப்படிவதினால் நமது “உள்ளான மனிதர்கள்” உயிர்ப்பிக்கப்படுகின்றன. *அப். 2:38;8:12.* மேற்கண்ட செயல்முறையின்படி தான் கிறிஸ்தவர்கள் தேவனுடைய ராஜ்யமாகிய கிறிஸ்துவின் ராஜ்யத்துக்கு உட்படுத்தப்பட்டிருக்கிறார்கள். *யோவான் 3:3; எபேசியர் 5:5.* தேவன் நியமித்த செயல்முறையாகிய ஞானஸ்நானம், விசுவாசத்துக்கும் மனந்திரும்புதலுக்கும் பிறகு இடம்பெறுகின்றது. இது ஒரு தேவனுடைய செயலாக இருக்கின்றது. *கொலோசெயர் 2:9-15* வரை உள்ள வசனங்களை தயவுகூர்ந்து கவனமாக வாசியுங்கள். தேவன் நியமித்த எல்லாச் செயல்முறைகளிலும் இறையியலும், தெய்வீக நீதி





நெறியும், அவர் நியமித்த குறிப்பிட்ட செயல் முறையும் இடம்பெறுகின்றன. கிறிஸ்தவர்களாகிய நாம் ஒழுங்கான **இறையியல்** அடிப்படையில் நமது விசுவாசத்துக்குக் கீழ்ப்படிந்தோம், (இயேசுவுடன் மரணம், அடக்கம், உயிர்த்தெழுதல்); **தெய்வீக நீதிநெறி,** (புதிய உடன்படிக்கையின் மீதான நம்முடைய விசுவாசத்தின் அடிப்படையில் புதிய உடன்படிக்கையை ஏற்றுக்கொள்ளும் நம் மனந்திரும்புதல்); ஞானஸ்நான **செயல்முறை** தண்ணீருக்குள் அடக்கம் பண்ணப்படுவதாக இருக்கின்றது. புதிதாகப் பிறந்ததன் பலனாக அவன்/ள் “மரணத்தைவிட்டு நீங்கி, ஜீவனுக்கு” உட்பட்டிருக்கிறான்/ள். *யோவான் 5:24.*

கிறிஸ்தவர்களாகிய நாம் உடன்படிக்கையை முறித்துப்போடு கிறவர்களாக இருந்தபோது செய்த கடந்த கால பாவங்களிலிருந்து நம்முடைய புதிய பிறப்பின் கிருபையால் இரட்சிக்கப்பட்டிருக்கிறோம். நாம் மனந்திரும்பினோம், அதாவது தேவனுடைய உடன்படிக்கையை ஏற்றுக்கொள்ளாமலும், தேவனுடைய ஜீவப் பிரமாணங்களுக்கு நம்முடைய இருதயங்களையும் மனங்களையும் திறக்காமலும் இருந்த நம்முடைய முந்தைய வாழ்க்கையிலிருந்து திரும்பினோம். நாம் நம்முடைய “இரட்சிப்பில் வளர” ஆரம்பிக்கும்படி கிருபையால் நமது கடந்த கால பாவங்களிலிருந்து இரட்சிப்பை பெற்றிருக்கிறோம். பார்க்கவும் *எபேசியர் 2:8-10; 1 பேதுரு 2:2,3; 2 பேதுரு 1:5-11.* எப்படியிருந்தாலும், நாம் “நன்மை தீமை அறியத்தக்க” சக்தியுள்ளவர்களாக இன்னமும் “ஆதாமுக்குள்” இருக்கின்றோம். விசுவாசத்தினால் நீதிமானாக்கக் கூடிய உபதேசம் தொடர்ந்து செயல்பட வேண்டியது நமக்கு அவசியமானது. *1 யோவான் 1:7.* “நாம் அவருக்குள் தேவனுடைய நீதியாகும்படிக்கு, பாவம்

அறியாத அவரை நமக்காகப் பாவமாக்கினார்" என்ற உண்மையின் அடிப்படையில் இது மற்றொரு கிருபையாக இருக்கின்றது. *2 கொரி. 5:21.*

***இவ்விதமாக, நாம் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டிருக்கிறபடியால், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துமூலமாய்*** **தேவனிடத்தில் சமாதானம் பெற்றிருக்கிறோம்.** ***அவர்மூலமாய் நாம் இந்தக் கிருபையில் பிரவேசிக்கும் சிலாக்கியத்தை விசுவாசத்தினால் பெற்று நிலைகொண்டிருந்து, தேவமகிமையை அடைவோமென்கிற நம்பிக்கையினாலே மேன்மைபாராட்டுகிறோம். ரோமர் 5:1,2.***

"பரலோகத்தில் திறக்கப்பட்டிருந்த ஒரு வாசலைக் கண்டேன்" என்று சொன்ன அப்போஸ்தலனாகிய யோவான் அதன் வழியாக கண்ட தரிசனங்களை பதிவு செய்து வைத்திருக்கிறதையும், தயவு கூர்ந்து கவனியுங்கள். வெளிப்படுத்தல் நான்காம், ஐந்தாம் அதிகாரங்களை தயவுகூர்ந்து வாசியுங்கள். இரண்டாவது தரிசனத்தில் இயேசு கிறிஸ்துவின் பிரசன்னத்தால் எழுச்சி உண்டானது. "யூதா கோத்திரத்துச் சிங்கமும், தாவீதின் வேருமானவர்...ஜெயங்கொண்டிருக்கிறார்." வெளி. 5:5. *2 சாமுவேல் 7:16*இல் தாவீதுக்குச் சொல்லப்பட்ட தீர்க்கதரிசனத்தின் நிறைவேற்றத்தைக் காண *அப். 2:29-36* பாருங்கள். "அவர்களும் மகா சத்தமிட்டு: அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியானவர் வல்லமையையும் ஐசுவரியத்தையும் ஞானத்தையும் பெலத்தையும் கனத்தையும் மகிமையையும் ஸ்தோத்திரத்தையும் பெற்றுக்கொள்ளப் பாத்திரராயிருக்கிறார் என்று சொன்னார்கள்." *வெளி. 5:12.* "இஸ்ரவேலுக்கு மனந்திரும்புதலையும் பாவமன்னிப்பையும் அருளுகிறதற்காக, அவரை அதிபதியாகவும் இரட்சகராகவும் தமது வலதுகரத்தினாலே உயர்த்தினார். இந்தச் சங்கதிகளைக்குறித்து நாங்கள்





அவருக்குச் சாட்சிகளாயிருக்கிறோம்; தேவன் தமக்குக் கீழ்ப்படிகிறவர்களுக்குத் தந்தருளின பரிசுத்த ஆவியும் சாட்சி என்றார்கள்." *அப்போஸ்தலர் 5:31,32.* தேவனுடைய சிங்காசனத்தை காண்பிக்கும் தரிசனம் எல்லா தேசத்தைச் சேர்ந்த மக்களும், பின்வருமாறு சொல்லுவதாக காண்பிக்கிறது: "சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிறவருக்கும் ஆட்டுக்குட்டியானவருக்கும் ஸ்தோத்திரமும் கனமும் மகிமையும் வல்லமையும் சதா காலங்களிலும் உண்டாவதாக." *வெளி. 5:13.* ஐந்தாம் அதிகாரத்தில் காண்பிக்கப்படும் காட்சியானது "அவருடைய அன்பின் குமாரனுடைய ராஜ்யத்திற்கு" உட்படுத்தப்பட்டிருக்கிற மக்களுடைய வாழ்க்கையின் தினசரி உண்மையாக இருக்கின்றது. பார்க்கவும் *வெளி. 1:4-6.*

காலவரிசை முறையில் தேவனுடைய வசனத்தை நாம் படிப்பதின் மூலம் நமது "விசுவாசக் கதவினை" தேவனுடைய ராஜ்யத்திற்கென்று விரிவாக திறக்கின்றோம். தேவனுடைய வசனத்தில் உள்ள மற்ற போதனைகளை நாம் புரிந்துகொண்டு அவைகள் மீது விசுவாசம் வைக்கிறதற்கு முன்பு சில தலைப்புகளில் நம்முடைய விசுவாசத்தை உறுதிபடுத்திக்கொள்ளவேண்டியது அவசியம். ஒரு கிறிஸ்தவனுடைய வேதபாடத்திற்கு பரிந்துரைக்கத் தக்க முறையில் இந்த புத்தகத்திலுள்ள பாடங்கள் கால வரிசைப்படி அமைக்கப்பட்டுள்ளன. உலகத்திலுள்ள மக்கள் "ஆதாமுக்குள்" இருக்கும் போது, அவர்களால் தங்களை தேவனுடைய ராஜ்யத்தில் பார்க்கமுடியாது. கிறிஸ்தவர்களாகிய நாம் நம்மை தேவனுடைய ராஜ்யத்தில் பார்க்கமுடியும். ஏனென்றால், நாம் ஆதாமுக்குள்/ "கிறிஸ்துவுக்குள்" இருக்கின்றோம். நம்முடைய விசுவாசக் கதவின் மூலமாகவும், இயேசு கிறிஸ்துவினுடைய ஆசாரியத்துவத்தின் மூலமாகவும் நாம் தேவனை நெருங்குவதால், அவருடைய சமூகத்தில் நாம் பிரவேசிக்க முடியும். அப்போஸ்தலர் 2ஆம் அதிகாரத்தில் நடந்த நிகழ்ச்சி சரித்திரத்தின்

தவிர்க்க முடியாத முக்கிய அம்சமாக விளங்குகிறது. தேவன் தெரிவிக்கின்ற வரலாற்றில் முதன்முறையாக தெய்வத்தன்மையுள்ள மூன்று பேரும் நித்திய ஜீவனை பெற உரிமையுள்ள தேவனுடைய "வாக்குத்தத்தத்தின் பிள்ளைகளை" உருவாக்குவதற்காக தங்களுடைய பங்கை உற்சாகமாக இணைந்து செய்கிறார்கள். *1 பேதுரு 1:1-2.*

*கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினுடைய கிருபையும், தேவனுடைய அன்பும், பரிசுத்த ஆவியினுடைய ஐக்கியமும், உங்கள் அனைவரோடுங்கூட இருப்பதாக. ஆமென். 2 கொரி. 13:14.*

இந்தச் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகளை பதிவுசெய்ய உலகம் தவறிவிட்டாலும் கூட "வாக்குத்தத்தத்தின் பிள்ளைகள்" அன்றைய தினம் சந்தோஷப்பட்டார்கள். இயேசு பரலோகத்திற்கு திரும்பச் சென்ற பிறகு வந்த முதல் பெந்தெகொஸ்தே தினத்தன்று நடந்த "எல்லா அடையாளங்களும், அதிசயங்களும் பல்வேறு அற்புதங்களும்" தேவனால் அவருடைய தீர்க்கதரிகள் மூலமாக முன்னுரைக்கப்பட்டிருந்தன. தேவனுடைய புதிய உடன்படிக்கையானது இயேசுவின் ராஜாங்கத்தினால் அவருடைய ஆசாரியத்துவத்தின் மூலமாக இந்தக் காலத்தில் தான் கொடுக்கப்படுகிறது. பூமியில் வாழும் மனுக்குலத்துக்கு இதுதான் கடைசிக்காலம். *1 கொரிந்தியர் 15:24.* தேவனுடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்து தம்முடைய பிதாவினுடைய வலது பாரிசத்துக்கு திரும்பிய பிறகு வந்த முதல் பெந்தெகொஸ்தே தினத்தன்று இந்தக் காலம் ஆரம்பமானது. பார்க்கவும் *அப்போஸ்தலர் 2:1-4; 11:15; எபிரெயர் 1:8;5:5,6.*

இயேசு கிறிஸ்துவின் ஆசாரியத்துவத்தின் ஆவிக்குரிய செயல்பாடு மாம்சத்திற்குரிய லேவிய ஆசாரியத்துவத்தினால் முன்கூட்டியே தெரிவிக்கப்பட்டு இருந்தது. இயேசு கிறிஸ்துவால் அப்போஸ்தலர் ஒன்று முதல் ஒன்பது அதிகாரங்களில் செய்யப்பட்ட தேவனுடைய மாபெரும்





சுவிசேஷ ஊழியத்தின் பலனாக கிடைக்கும் ஜீவனையும், தேவனுடைய ராஜ்யத்தையும் சுதந்தரிக்கும்படி மாம்சத்திற்குரிய இஸ்ரவேலின் ஒரு பகுதி காப்பாற்றப்பட்டது. *மத்தேயு 19:29;25:34; ரோமர் 9:7-10.* அப்போஸ்தலர்களும் மற்ற கிறிஸ்தவர்களும் வாய்மொழியாக தேவனுடைய ராஜ்யத்தைத் தொடர்ந்து பிரசங்கிக்கவும், போதிக்கவும் அவர்களுக்கு உதவுவதற்காக இயேசு பரிசுத்த ஆவியானவரை அனுப்பினார். *யோவான் 15:26; அப்போஸ்தலர் 8:12; 20:25.* அதே நேரத்தில் சில மனிதர்கள், பரிசுத்த ஆவியானவருடைய வழிநடத்துதலின் படி தேவனுடைய செய்திகளை இலக்கிய வடிவத்தில் எழுதி வைத்தார்கள். *1 கொரிந்தியர் 2:10-13; 2 தீமோத்தேயு 3:16,17; 2 பேதுரு 1:21.*

இந்தச் செய்தி முதல் நூற்றாண்டு வேதாகம வரலாற்றுக் கதைகளிலும், நிருபங்களிலும் இடம் பெற்றுள்ள உண்மை வாழ்க்கை சம்பவங்களில் பதியவைக்கப்பட்டு உள்ளது; இதன் காரணமாக கிறிஸ்துவின் சீஷர்கள் வரலாற்றை ஆராயவேண்டி இருக்கின்றது. அப்பொழுது தான் பரிசுத்த ஆவியானவர் வழியாக இயேசு கிறிஸ்து மூலமாக தேவன் தங்களிடம் பேசுவதை அவர்கள் ஒழுங்காகக் கேட்க முடியும். வேதத்தை அறியாததினாலேயே அநேக கிறிஸ்தவர்கள் ஆவிக்குரிய வளர்ச்சியின்றி காணப்படுகிறார்கள். ஏனெனில் பிரசங்கியர்களும், போதகர்களும் பெரும்பாலும் வேதவசனங்கள் எதை அர்த்தப்படுத்துகின்றன என்று கற்றுக்கொள்வதற்கு முன்பாகவே அதன் அர்த்தத்தை சொல்லிவிட வேண்டும் என்று முயற்சிக்கிறார்கள். ஒவ்வொரு கிறிஸ்தவனும் தேவனுடைய வார்த்தையைக்கேட்டு தன்னுடைய தனிப்பட்ட விசுவாசத்தை வளர்த்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறான். *ரோமர் 10:17.*

கிறிஸ்துவின் சரீரத்தில் செயல்படுகின்ற கிறிஸ்தவர்கள் வாழ்கின்ற சூழல் "நிஜமானதாக" இருக்கிறது. *எபிரெயர் 9:23-28.* "கிறிஸ்துவுக்குள்"

ஏற்படுத்தப்பட்டிருக்கின்ற புத்தம் புதிய ராஜ்யத்தில், பரலோக படைகளும் பூமிக்குரிய படைகளும் இணைந்து கிறிஸ்தவர்களுடைய சுத்திகரிப்புக்காக ஏதேன் தோட்டத்தின் ஆவிக்குரிய சூழலை மனதளவில் மீண்டும் உருவாக்குகின்றன. *1 தெச. 2:14;5:4-8; 2 தெச. 2:13,14.*

- "இப்படியிருக்க, சகோதரரே, நாம் அடிமையானவளுக்குப் பிள்ளைகளாயிராமல், **சுயாதீனமுள்ளவளுக்கே** பிள்ளைகளாயிருக்கிறோம்." *கலாத்தியர் 4:31.*
- "கிறிஸ்து இயேசுவுக்குள் நம்மை அவரோடேகூட எழுப்பி, **உன்னதங்களிலே** அவரோடேகூட உட்காரவும் செய்தார்." *எபேசியர் 2:7.*
- **"நம்முடைய குடியிருப்போ பரலோகத்திலிருக்கிறது."** *பிலி. 3:20.*
- "ஏனென்றால், நீங்கள் மரித்தீர்கள், உங்கள் ஜீவன் **கிறிஸ்துவுடனே** தேவனுக்குள் **மறைந்திருக்கிறது.**" *கொலோ. 3:3.*
- "நீங்களெல்லாரும் வெளிச்சத்தின் பிள்ளைகளும், **பகலின் பிள்ளைகளுமாயிருக்கிறீர்கள்.**" *1 தெச. 5:5.*
- "ஆதலால், பரலோகத்திலுள்ளவைகளுக்குச் சாயலானவைகள் இப்படிப்பட்ட பலிகளினாலே சுத்திகரிக்கப்படவேண்டியதாயிருந்தது; **பரலோகத்திலுள்ளவைகளோ** இவைகளிலும் விசேஷித்த பலிகளாலே சுத்திகரிக்கப்படவேண்டியதாமே. அந்தப்படி, மெய்யான பரிசுத்த ஸ்தலத்துக்கு அடையாளமான கையினால் செய்யப்பட்டதாயிருக்கிற பரிசுத்த ஸ்தலத்திலே கிறிஸ்துவானவர் பிரவேசியாமல், பரலோகத்திலே தானே **இப்பொழுது நமக்காகத் தேவனுடைய சமுகத்தில் பிரத்தியட்சமாகும்படி** பிரவேசித்திருக்கிறார்." *எபிரெயர் 9:23,24.*

"கிறிஸ்துவுக்குள்" ஏற்படுத்தப்பட்டுள்ள ஆவிக்குரிய/மனத்திற்குரிய சூழல், உடன்படிக்கை முறிக்கப்படுவதற்கு முன்பு ஏதேன் தோட்டத்திலிருந்த





சூழலுக்கு ஒத்திருக்கிறது. கிறிஸ்துவுக்குள்ளான சூழலும், ஏதேன் தோட்டத்துச் சூழலும் மூன்று தனிப்பட்ட அம்சங்களால் உருவாக்கப்பட்டுள்ளன. இரண்டு எதிர்மறையானவை ஒன்று நேர்மறையானது. ஆதாமும் ஏவாளும் பாவத்தின் குற்றத்தை உணரவில்லை அல்லது மரண பயத்தை உணரவில்லை. கூடுதலாக அவர்கள் தேவனுடன் ஐக்கியத்தையும் அனுபவித்து மகிழ்ந்தார்கள். தேவனுடைய கிருபையினாலும், பரிசுத்த ஆவியானவருடைய பிரசன்னத்தினாலும் இதே நிலைமையை கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவுக்குள் அனுபவிக்கிறார்கள். "மறுபடியும் பிறப்பது" மற்றும் "விசுவாசத்தினால் நீதிமானாக்குவது" ஆகிய உபதேசங்களால் கிறிஸ்தவர்களுடைய மனச்சாட்சிகள் குற்ற உணர்ச்சி இன்றி இருக்கின்றன. பார்க்கவும் *யோ. 1:12,13; ரோமர் 3:21-26.*

"பரலோகத்தில் உள்ளவைகளின் நிழலுக்கும், சாயலுக்கும்" ஒத்திருக்கும்படி மோசே கட்டிய ஆசரிப்புக் கூடாரத்தில் இருந்த பரிசுத்த ஸ்தலமானது எவ்வளவு சிறப்பு வாய்ந்தது என்பதை கிறிஸ்தவர்கள் விளங்கிக்கொள்வதற்கு இப்பாடத்தில் முன் சொல்லப்பட்ட பகுதியின் மீது கிறிஸ்தவர்கள் விசுவாசம் வைக்கவேண்டியது அவசியம். *எபிரெயர் 8:5.* நமது "விசுவாசமானது நம்பப்படுகிறவைகளின் உறுதியும், காணப்படாதவைகளின் நிச்சயமுமாயிருக்கிறது." *எபிரெயர் 11:1.* (hupostasis) ஹுப்போஸ்டேஸிஸ் என்ற கிரேக்க வார்த்தையிலிருந்து "உறுதி" என்ற வார்த்தை மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இதே வார்த்தை தான் *எபிரெயர் 1:3*இல் தன்மை என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இந்த இடத்தில் ஹுப்போஸ்டேஸிஸ் (hupostasis) என்பதன் பொருள் நம்முடைய பிதாவாகிய ஜீவனுள்ள தேவனுடைய உண்மையான தன்மைப்பற்றிய தெய்வீக சாராம்சத்தை எப்படி இயேசு கிறிஸ்து கொடுத்தார் என்பதை விளக்குகிறது. *எபிரெயர் 1:3*இல் ஹுப்போஸ்டேஸிஸ் (hupostasis) என்ற வார்த்தையின் பயன்பாட்டை புரிந்துகொள்வதினால், *எபிரெயர் 11:1*இல்

இதே வார்த்தை பயன்படுத்தப்பட்டிருக்கும் அர்த்தத்தின் சிறப்பை நாம் அறிந்துகொள்ள முடியும். “நிச்சயம்” என்ற வார்த்தை எலெக்கோஸ் (elegchos) என்ற கிரேக்க வார்த்தையிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இது சாட்சியம் என்பதைக் குறிக்கிறது.

சோதிக்கப்பட்ட விசுவாசத்தை உடைய ஒரு கிறிஸ்தவனுக்கு இது தெரியப்படுத்துவது: தேவனுடைய வார்த்தையைக் குறித்து இவர்களுடைய மனதில் எதை புரிந்துகொண்டு நம்புகிறார்களோ, இவர்களுடைய இருதயத்தில் என்ன விசுவாசம் இருக்கிறதோ, அதுவே இவர்களுடைய தற்கால வாழ்க்கையில் உண்மையாக ஆகிவிட்டது. மனுக்குலம் கற்பனை செய்யும் சக்தியை பெற்றிருப்பதால் இது சாத்தியமாகும். நமது வேத பாடத்தோடு இணைத்து கற்பனை சக்தியை நாம் பயன்படுத்துகிறோம். எடுத்துக்காட்டாக, *ரோமர் 8:28-30* வரை உள்ள வசனங்களை தியானித்து, தேவனுடைய ராஜ்யத்தில் நாம் பிள்ளைகளாக இருப்பதாக நாம் கற்பனை செய்துகொள்ளுகின்றோம். நாம் என்ன கற்பனை செய்கிறோமோ அதற்கு விசுவாசம் உறுதியைத் தருகின்றது. இவ்விதமாக, நாம் “தேவனுடைய பெலத்தினால்” அதிகாரம் பெற்றிருக்கிறோம். *1 கொரி. 2:4,5; 4:20.* நாம் இந்தப் பூமியில் வாழும் போதே தேவனுடைய ராஜ்யமாகிய கிறிஸ்துவின் ராஜ்யத்தில் குடிமக்களாக வாழும்படி நமது “உள்ளான மனிதர்களுக்கு” இந்த ராஜ்யம் “தெய்வீக சாராம்சத்தைத்” தருகின்றது. நாம் பாவத்தை ஜெயித்து, நமக்கு தேவன் கொடுத்திருக்கிற ஈவுகளை பயன்படுத்தி மற்றவர்களுக்கு உதவி செய்வதால், தேவன் நமக்கென்று தரும் நன்மைகளை அனுபவித்து மகிழ்வதற்கு இந்த தரிசனமும், வல்லமையும் நமக்கு அவசியம். *1 பேதுரு 4:7-10.* “நன்மையான எந்த ஈவும் பூரணமான எந்த வரமும் பரத்திலிருந்துண்டாகி, சோதிகளின் பிதாவினிடத்திலிருந்து இறங்கிவருகிறது; அவரிடத்தில் யாதொரு மாறுதலும் யாதொரு வேற்றுமையின் நிழலுமில்லை.” *யாக்கோபு 1:17.* “பிதாவாகிய ஒரே





தேவன் நமக்குண்டு, அவராலே சகலமும் உண்டாயிருக்கிறது; அவருக்கென்று நாமும் உண்டாயிருக்கிறோம். இயேசுகிறிஸ்து என்னும் ஒரே கர்த்தரும் நமக்குண்டு; அவர் மூலமாய்ச் சகலமும் உண்டாயிருக் கிறது; அவர் மூலமாய் நாமும் உண்டாயிருக்கிறோம்.” *1 கொரி. 8:6.* மத சாஸ்திரங்கள், நீதிநெறிகள், நாம் கற்றுக்கொண்டு நம்பி நமது விசுவாசத்தை வைத்துள்ள செயல்முறைகள் ஆகியவற்றின் மீது நமக்குள்ள விசுவாசம், இயேசு சாத்தானை ஜெயித்தது போல நாமும் அவனை ஜெயிப்பதற்கு அவசியமான தற்காப்பு சாதனமாக விளங்குகின்றது. *லூக்கா 4:1-13; 1 பேதுரு 5:8.* “கடைசியாக, என் சகோதரரே, கர்த்தரிலும் அவருடைய சத்துவத்தின் வல்லமையிலும் பலப்படுங்கள்.”

*நீங்கள் பிசாசின் தந்திரங்களோடு எதிர்த்துநிற்கத் திராணியுள்ளவர்களாகும்படி, தேவனுடைய சர்வாயுதவர்க்கத் தையும் தரித்துக்கொள்ளுங்கள். ஏனெனில், மாம்சத்தோடும் இரத்தத்தோடுமல்ல, துரைத்தனங்களோடும், அதிகாரங்க ளோடும், இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகளோடும், வான மண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைக ளோடும் நமக்குப் போராட்டம் உண்டு. ஆகையால், தீங்கு நாளிலே அவைகளை நீங்கள் எதிர்க்கவும், சகலத்தையும் செய்து முடித்தவர்களாய் நிற்கவும் திராணியுள்ளவர்களாகும்படிக்கு, தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தையும் எடுத்துக்கொள்ளுங் கள். சத்தியம் என்னும் கச்சையை உங்கள் அரையில் கட்டினவர் களாயும், நீதியென்னும் மார்க்கவசத்தை தரித்தவர்களாயும்; சமாதானத்தின் சுவிசேஷத்திற்குரிய ஆயத்தம் என்னும் பாதரட்சையைக் கால்களிலே தொடுத்தவர்களாயும்; பொல்லாங்கன் எய்யும் அக்கினியாஸ்திரங்களையெல்லாம்*

*அவித்துப்போடத்தக்கதாய், எல்லாவற்றிற்கும் மேலாக விசுவாசமென்னும் கேடகத்தைப் பிடித்துக்கொண்டவர்களாயும் நில்லுங்கள். இரட்சணியமென்னும் தலைச்சீராவையும், தேவவசனமாகிய ஆவியின் பட்டயத்தையும் எடுத்துக்கொள்ளுங்கள். எந்தச் சமயத்திலும் சகலவிதமான வேண்டுதலோடும் விண்ணப்பத்தோடும் ஆவியினாலே ஜெபம்பண்ணி, அதன் பொருட்டு மிகுந்த மனஉறுதியோடும் சகல பரிசுத்தவான்களுக்காகவும் பண்ணும் வேண்டுதலோடும் விழித்துக்கொண்டிருங்கள். எபேசியர் 6:11-18.*

இயேசு கிறிஸ்து நம்முடைய பிரதான ஆசாரியராகவும், ராஜாவாகவும் இருக்கிறார் என்ற உறுதியையும், நிச்சயத்தையும் நாம் பெற்று மகிழ்வதன் மூலம் தேவனுடைய ராஜ்யத்திற்குள் நமது “விசுவாச கதவினை” விரிவாக திறந்துகொள்ள உதவி செய்வதே இந்தப் பாடத்தின் நோக்கம். நமது ஆசாரியராகிய இயேசு கிறிஸ்து நமக்காக பரிந்துபேசுகிறவராகவும், நமக்கான கிருபாதார பலியாகவும் பரலோகத்தி லுள்ள நமது பிதாவின் சமூகத்தில் தொடர்ச்சியாக நம் நிமித்தம் ஊழியஞ்செய்கிறார். *1 யோ. 2:1-2; எபி. 2:16-18;4:14-16;5:7-10;7:25.* இயேசு கிறிஸ்துவுடைய ஆசாரியத்துவத்தின் முன்னோட்டக் காட்சியை இஸ்ரவேலர்கள் பார்த்தார்கள். ஆனால் புறஜாதிகளுக்கு அந்த வாய்ப்பு கிடைக்கவில்லை. அப்படியிருந்தாலும் “ஜீவனுக்கேதுவான மனந்திரும்புதலை” அடையும் வாய்ப்பை புறஜாதியார் கடைசியில் பெற்றுக் கொண்டார்கள். எருசலேமிலிருந்த “விருத்தசேதனமுள்ளவர்களுக்கு” *(அப்போஸ்தலர் 11:2,3)* முன்பாக கொர்நேலியுவின் வீட்டாரை, தான் சந்தித்ததைக் குறித்து பேதுரு சுருக்கமாக நினைவுபடுத்திக் கூறும் காட்சியை பின்வருமாறு காணலாம்:





*ஆதலால் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசித்திருக்கிற நமக்குத் தேவன் வரத்தை அநுக்கிரகம்பண்ணினது போல அவர்களுக்கும் அந்த வரத்தையே அநுக்கிரகம்பண்ணியிருக்கும்போது தேவனைத் தடுக்கிறதற்கு நான் எம்மாத்திரம் என்றான். இவைகளை அவர்கள் கேட்டபொழுது அமர்ந்திருந்து:* ***அப்படியானால் ஜீவனுக்கேதுவான மனந்திரும்புதலைத் தேவன் புறஜாதியாருக்கும் அருளிச் செய்தார்*** *என்று சொல்லி, தேவனை மகிமைப்படுத்தினார்கள். அப். 11:17,18.*

இந்தத் தொகுப்பிலுள்ள பாடங்கள் யாவும் கால வரிசை முறைப்படியான தலைப்புகளாக அமைக்கப்பட்டுள்ளன. நீதியுள்ள வாழ்க்கையை நாம் வாழ்வதற்கு வேண்டிய விசுவாசத்தை உருவாக்கி, நமது வேதபாடத்தை அதிக சிறப்பாக்குவதே இந்த பாடத்தின் நோக்கம். *ரோமர் 6:13,16,22.* “அதிக பயத்தோடும் நடுக்கத்தோடும் உங்கள் இரட்சிப்பு நிறைவேற” பிரயாசப்படும்படி நீங்கள் கிருபையால் இரட்சிக்கப்படுகிறீர்கள். *பிலிப்பியர் 2:12.* தேவனுடைய பரலோக ராஜ்யத்திற்குள் நமது விசுவாச கதவினை திறந்த நிலையில் வைத்துக் கொண்டாலொழிய, நாம் அவருடைய ராஜ்யத்தில் பிள்ளைகளாக வாழ்வதைப் பற்றி சந்தோஷப்படவோ, அவருடைய வார்த்தையின் ஆவிக்குரிய கருத்தம்சங்களை புரிந்துகொள்ளவோ முடியாது. தேவன் “புறஜாதிகளுக்கு விசுவாசத்தின் கதவை” திறந்தருளினார். *அப்போஸ்தலர் 14:27.* ஆனால், எல்லா கிறிஸ்தவர்களும் “நீதிமான்களாக்கப்பட்ட பாவிகளாய்” இருப்பதனால், இயேசு இப்பொழுது நமது பிரதான ஆசாரியராக ஊழியஞ்செய்துகொண்டிருக்கும் “மெய்யான ஆசரிப்புக் கூடாரத்துக்குள்” நமது கதவினை திறந்த நிலையில் வைத்துக்கொள்வது கட்டாயமாகின்றது:

*ஆகையால், சகோதரரே, நாம் பரிசுத்தஸ்தலத்தில் பிரவேசிப்பதற்கு இயேசுவானவர் தமது மாம்சமாகிய திரையின் வழியாய்ப் புதிதும் ஜீவனுமான மார்க்கத்தை நமக்கு உண்டுபண்ணினபடியால், அந்த மார்க்கத்தின்வழியாய்ப் பிரவேசிப்பதற்கு அவருடைய இரத்தத்தினாலே நமக்குத் தைரியம் உண்டாயிருக்கிறபடியினாலும், தேவனுடைய வீட்டின்மேல் அதிகாரியான மகா ஆசாரியர் நமக்கு ஒருவர் இருக்கிறபடியினாலும், துர்மனச்சாட்சி நீங்கத் தெளிக்கப்பட்ட இருதயமுள்ளவர்களாயும், சுத்த ஜலத்தால் கழுவப்பட்ட சரீரமுள்ளவர்களாயும், உண்மையுள்ள இருதயத்தோடும் விசுவாசத்தின் பூரண நிச்சயத்தோடும் சேரக்கடவோம். அல்லாமலும், நம்முடைய நம்பிக்கையை அறிக்கையிடுகிறதில் அசைவில்லாமல் உறுதியாயிருக்கக்கடவோம்; வாக்குத்தத்தம் பண்ணினவர் உண்மையுள்ளவராயிருக்கிறாரே. எபி. 10:19-23.*

கிறிஸ்தவர்களும், இயேசு கிறிஸ்துவும் தேவனுடைய ராஜ்யத்தில் பொதுவான அக்கறையுள்ளவர்களாக இருக்கிறார்கள். தேவனுடைய ராஜ்யத்தில் பிள்ளைகளை ஏற்படுத்தும்படி மனுக்குலத்தை உருவாக்கின **அவருடைய சித்தத்தை** குறித்து இயேசு கவலைப்படுகின்றார். தேவனுடைய சித்தம் பூமியின் மீது செய்யப்படவேண்டும் என்பதற்காக நாம் கவலைப்படுகிறோம்; ஏனெனில், அப்படிச் செய்யப்பட்டால்தான் அவருடைய ராஜ்யத்தை நாம் காண முடியும். *மத்தேயு 6:10.* அவருடைய சித்தத்தை நாம் செயல்படுத்துவோமானால், அவருடைய ராஜ்யம் நமக்குள் இருக்கும். *லூக்கா 17:20,21.* தேவனுடைய குடும்பத்திற்கு பிள்ளைகளை கொண்டுவந்து சேர்க்கும்படியாகவே அவர் ஆசாரியத்துவத்தையும், ராஜ்ய உரிமையையும் இயேசுவுக்கு கொடுத்திருக்கின்றார். *எபி. 2:8-16.* "இழந்து போனதைத் தேடவும் இரட்சிக்கவுமே" இயேசு





நியமிக்கப்பட்டிருப்பதால் அதை செய்வதற்கான வல்லமை அவருக்கு கொடுக்கப்பட்டிருக்கின்றது. *லூக்கா 19:10.* இதைச் செய்வதற்கு இயேசு மனுக்குலத்திற்கான பாவப்பலியாக சிலுவையின் மீது மரிப்பது மட்டும் போதுமானதாய் இருக்கவில்லை. இந்த உலகத்தில் சாத்தான் செயல்பட்டுக் கொண்டிருக்கிறான். ராஜாக்களோ, ஜனாதிபதிகளோ அல்லது முதல் அமைச்சர்களோ அவனைத் தடுக்க முடியாது. ஆனால் இயேசுவை தங்களுடைய ஜீவ ஒளியாக விசுவாசிப்பவர்களுக்காக சாத்தானுடைய மரண அதிகாரத்தை அவர் நீக்கி விட்டார்.

தேவனுடைய ராஜ்யம் இயேசு கிறிஸ்து தோன்றிய போது ஆரம்பமானது அல்ல என்பதை கிறிஸ்தவர்கள் புரிந்துகொள்கிறார்கள். ராஜ்யமானது ஆவிக்குரியதாகவும், நித்தியமானதாகவும் இருக்கின்றது. தேவன் ஆவியாயிருக்கிறார். அவரே நித்தியமான ஆவிக்குரிய ராஜாவாகவும் இருக்கின்றார். *1 தீமோத்தேயு 6:13-16.* தேவனுடைய ராஜ்யத்திலிருந்து அவரை தனியே பிரித்தெடுக்க முடியாது. இன்றைக்கு இயேசு கிறிஸ்து தமது பிதாவும், ராஜாதிராஜாவுமாய் இருக்கிறவருடைய ஆளுகைக்கு உட்பட்டு ராஜாவாக அவருடைய மக்களுக்கு ஊழியஞ்செய்கின்றார். மனுக்குலத்துக்கு அருகில் நெருங்கும்படி தேவன் சாத்தானை அனுமதித்திருக்கிறார். *ஆதியாகமம் 3:1; மத்தேயு 4:1-11.* ஆதாமையும், ஏவாளையும் தேவன் உருவாக்கினது போலவே அவர்கள் இருக்கவேண்டும் என்று அவர் விரும்பவில்லை. "தேர்ந்தெடுக்கும் உரிமையை" அவர்கள் செயல்படுத்தி விட்ட பிறகு, தம்முடைய உடன்படிக்கைக்குக் கீழ்ப்படியவேண்டும் அல்லது கீழ்ப்படியக்கூடாது என்று விரும்பினார். பிள்ளைகள் ஒழுங்காக செயல்படுவதற்கு "தேர்ந்தெடுக்கும் உரிமையை" அவர்களுக்கு கொடுப்பது தான் ஒரே வழியாக இருக்கிறது என்பது பெற்றாருக்கு தெரிந்து இருக்கவேண்டும் அல்லது கற்றுக்கொள்ள வேண்டும்.

தேவனுடைய "தீர்மானத்தையும் கிருபையையும்" குறித்த அவருடைய சரித்திரக் கதையானது *ஆதியாகமம் 1:1*இல் ஆரம்பிக்கிறது. *2 தீமோத்தேயு 1:9.* தேவனுடைய கதையில் சாத்தான் எதிரியாக இருக்கிறான். இயேசு கிறிஸ்து வெளிப்படுவது வரையிலும் அவன் இந்த உலக ராஜ்யத்தில் வயதில் பெரியவர்களாக இருக்கும் மக்களுடைய இருதயங்களிலும் மனங்களிலும் தொடர்ந்து ஆட்சி செய்வான். *வெளி. 12:9; 19:6-12.* மக்களுடைய இருதயங்களிலும், மனங்களிலும் அவர்களுடைய பாவத்தின் மூலமாக ஆட்சி செய்யும் வல்லமையை சாத்தான் பெற்றிருக்கிறான். பாவமானது, இந்த உலகத்தில் வயதில் பெரியவர்களாக உள்ள எல்லா மக்களுக்கும் ஆவிக்குரிய மரணத்தை ஏற்படுத்தியிருக்கின்றது. அதுமட்டுமல்ல பாவம் ஒரு கிறிஸ்தவனுக்கும் ஆவிக்குரிய மரணத்தை ஏற்படுத்த முடியும். *யாக்கோபு 1:13-15.*

எல்லா மக்களையும் தம்முடைய பிள்ளைகளாக்கிக்கொள்வது தான் தேவனுடைய கதையில் முக்கிய நிகழ்ச்சியாக இருக்கின்றது. *எபிரெயர் 2:10.* உலகத்தை உருவாக்குவதற்கு முன்பாகவே தேவன் தம்முடைய மனதில் தீர்மானமும், கிருபையும், உடையவரா யிருந்தார். *ரோமர் 8:28-30; 1 பேதுரு 1:18-21.* தேவன் தமது விருப்பத்தை கட்டுப்படுத்தும் சக்தியைப் பெற்றிருக்கிறார். அதனால், அவருடைய மனதில் இருப்பது என்னவோ அது நடக்கும். இந்த முக்கிய நிகழ்ச்சி இயேசு கிறிஸ்து வெளிப்படும் போது முடிவுபெறும். *2 தெச. 1:3-10.* விசுவாசமுள்ள ஒவ்வொரு கிறிஸ்தவனுக்கும் கிடைக்கப் போவது தண்டனையா அல்லது பலனா என்பது நியாயத்தீர்ப்பு நாளிலே தெரியவரும். பார்க்கவும் *வெளி. 20:11-15; 21:7,8.*

தேவனுடைய ராஜ்யத்தில் அவருடைய பிள்ளைகளாக நித்திய ஜீவனை கிறிஸ்தவர்கள் சுதந்தரிப்பதைக் குறித்து சொல்லப்பட்டுள்ள





கிறிஸ்துவினுடைய எல்லா தீர்க்கதரிசனங்களும் தேவனிடம் அன்புகூர கற்றுக்கொள்ளுகிறவர்களுக்கு மாத்திரமே பொருந்தும். *1 கொரி. 2:9; ரோமர் 8:28.* இக்காலத்தில் கிறிஸ்தவர்கள் தேவனுடைய உடன் படிக்கைகள் மீது விசுவாசம் உள்ளவர்களாய் இருக்கிறார்கள். இயேசு கிறிஸ்து வெளிப்படும் போது கிடைக்க இருக்கும் சுதந்தரத்தைக் குறித்து நம்பிக்கை உள்ளவர்களாகவும் இருக்கிறார்கள். *1 பேதுரு 1:7.* நம் தேவனுடைய அன்பின் மீது நாம் விசுவாசம் உள்ளவர்களாய் இருப்பதினால் அவரிடத்தில் அன்புகூருகின்றோம். *2 கொரிந்தியர் 1:3-6.* விசுவாசம், நம்பிக்கை என்ற வார்த்தைகள் இந்த உலகத்திற்குத் தான் முக்கியத்துவம் வாய்ந்தவைகளாக இருக்கின்றன – அன்போ நித்தியமானது. *1 கொரிந்தியர் 13:13; 1 யோவான் 4:12.* கிறிஸ்தவர்களுடைய நம்பிக்கை தேவனுடைய வாக்குத்தத்தங்களை அடிப்படையாகக் கொண்டது. "தேவன் நம்மேல் வைத்திருக்கிற அன்பை நாம் அறிந்து விசுவாசித்திருக்கிறோம். தேவன் அன்பாகவே இருக்கிறார்; அன்பில் நிலைத்திருக்கிறவன் தேவனில் நிலைத்திருக்கிறான், தேவனும் அவனில் நிலைத்திருக்கிறார். நியாயத்தீர்ப்புநாளிலே நமக்குத் தைரியமுண்டா யிருக்கத்தக்கதாக அன்பு நம்மிடத்தில் பூரணப்படுகிறது; ஏனென்றால், அவர் இருக்கிறபிரகாரமாக நாமும் இவ்வுலகத்தில் இருக்கிறோம்." *1 யோவான் 4:16,17.* இதைத்தான் இயேசு தமது "மலைப் பிரசங்கத்தின்" இறுதியில் உவமையாக போதித்தார். *மத்தேயு 7:24-27.* தேவன் நம்மிடத்தில் அன்புகூருவது போல நாம் அன்புகூர கற்றுக்கொள்வதும் உறுதியான குணமாகிய கன்மலையின் மேல் அஸ்திபாரம் போடுவதும் நமது சுத்திகரிப்புக்காக நாம் செய்யும் பயிற்சிகளாகும். வளர்ந்து வந்த தெசலோனிக்கேயர் சபைக்காக அப்போஸ்தலனாகிய பவுல் பண்ணின ஜெபத்தில் காணப்படும் அன்பின் ஆவியோடு இந்த பாடத்தொகுப்பை நாம் நிறைவு செய்யலாம்.

*நாங்கள் உங்களிடத்தில் வைத்திருக்கிற அன்புக் கொப்பாய், நீங்களும் ஒருவரிடத்தில் ஒருவர் வைக்கும் அன்பிலும் மற்றெல்லா மனுஷரிடத்தில் வைக்கும் அன்பிலும் கர்த்தர் உங்களைப் பெருகவும் நிலைத்தோங்கவும் செய்து, இவ்விதமாய் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து தமது பரிசுத்தவான்கள் அனைவரோடுங்கூட வரும்போது, நீங்கள் நம்முடைய பிதாவாகிய தேவனுக்கு முன்பாகப் பிழையற்ற பரிசுத்தமுள்ளவர்களாயிருக்கும்படி உங்கள் இருதயங்களை ஸ்திரப்படுத்துவாராக. 1 தெசலோனிக்கேயர் 3:12,13.*